2020 ஜனவரி 8]

மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு முறையும் Board meeting*–ல் வைத்து, சிறுநீரகம் மாற்றம் செய்வது தொடர்பாக முடிவெடுக்க அதிக காலம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. சிறுநீரக நோயாளிகள்* Dialysis *செய்வதற்கு மிகவும் கஷ்டப்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதிகமான அளவில், சுமார் 1.6 இலட்சம் பேர் இன்றைக்கு சிறுநீரகத்திற்காக காத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே,* Dialysis *செய்கின்றவர்களுக்கான* Board meeting*–ஐ விரைந்து நடத்தி முடிவெடுப்பதோடு, காப்பீட்டுத் திட்டத்தில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பிச்சாண்டி அவர்கள் முதலமைச்சருடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் சொல்கிறாரா அல்லது ஓய்வூதியதாரரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் சொல்கிறாரா என்பது தெரியவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

யோகா மையம்

***35656—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலத்தில் யோகா மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலத்தில் யோகா மையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கன்னிப் பேச்சிலிருந்து, இந்த அவையில் 3, 4 முறை மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று கேட்டதன்பேரில், எங்களுக்கு மருத்துவக் கல்லூரி அளித்த அரசுக்கும், மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நல்லதே நடக்கும் என்று கூறிய மரியாதைக்குரிய மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் அவர்களுக்கும், நிச்சயமாக நல்லதே நடக்கும் என்று கூறிய மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நான் முதலில் நன்றியை சமர்ப்பிக்கிறேன். அங்கு* Multi Speciality Hospital *கொண்டு வந்ததற்கும்,* college *கொண்டு வந்ததற்கும்,* Tourists *சார்பாகவும், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், முதற்கண் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

அடுத்து, parking *வசதி கேட்டிருந்தேன். அதுகுறித்துப் பேச வாய்ப்பில்லாமல் போய்விட்டது.* Race Course *பகுதியில் நான்கு ஏக்கர் இடம் கேட்டிருந்தோம். 1¾ ஏக்கர் இடம்* sanction *செய்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு ஏக்கர் இடம்* bus stand *பகுதியில் இருக்கிறது.* MRC*–வுடன் பேசி, அந்த இடத்தையும் பெற்றுக் கொடுத்தீர்களென்றால், 70 சதவிகித பணிகள் முடிந்துவிடும். இப்போது* Multi Speciality Hospital*–ஐ அமைக்க திட்டமிட்டிருக்கின்ற இடமானது வனத் துறைக்குச் சொந்தமானது. அதற்கான கருத்துரு, அனுமதி கோரி வனத் துறைச் செயலாளர்*

2020 ஜனவரி 8]

அவர்களிடம் நிலுவையில் இருந்தது. இப்பொழுது அந்தக் கருத்துருவை மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டார்கள். மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான விடையும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இந்த hospital*–க்கான* Dean*–ஐ நியமனம் செய்தாகிவிட்டது. மத்திய வனத் துறையினரிடமிருந்து* No Objection Certificate *கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும்.* HPF *இருக்கின்ற இடத்திலேயே நீங்கள் தயவுசெய்து ஒரு யோகா மையத்தை அமைத்துக் கொடுத்தீர்களென்றால், வருகின்ற* tourists*–க்கு மட்டுமல்லாமல், அனைவருக்குமே அந்தப் பயிற்சி மையம் நிச்சயமாக உதவிகரமாக இருக்கும் என்பதால், அதுகுறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட விளையாட்டு மையம் அங்கே இருக்கிறது. அதிலே,* indoor stadium*–ல்தான் இந்தப் பயிற்சியை அளிக்க முடியும். ஏனென்றால், நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆறு மாத காலம் குளிர் காலமாக இருக்கும். அதனால், அப்போது பயிற்சி அளிக்க இயலாது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கருத்தில் கொள்ளப்படும். அருகில் கோத்தகிரியில் தனியார் நிறுவனத்தின் மூலமாக இப்போது அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களே முன்வந்து பயிற்சியாளர்களை அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பயிற்சியாளர்களை அங்கு அனுப்பி, எவ்வளவு பேர் பயிற்சிக்காக வருகிறார்கள் என்பதைக் கணக்கிட்டு, அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். அதே நேரத்தில், இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு* MAT *தேவை. அவர்கள் பயிற்சி அளிக்கின்றபோது அதற்கான நிதியை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வழங்கினால், எத்தனை பேர் வந்தாலும் அதற்கான பயிற்சி அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

[2020 ஜனவரி 8

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்களும், மரியாதைக்குரிய துணை சபாநாயகர் அவர்களும் ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள். அதாவது, மலையாளி certificate என்பது ஈழுவா மக்களுக்கானது. ஈழுவா மக்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகில் வசித்து வருகிறார்கள். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் பெறுவதற்காக அருகிலுள்ள சிறுபான்மையினர் நல அலுவலர் அலுவலகத்திற்குச் சென்று விசாரித்தேன். டெல்லியிலும் இதுகுறித்து follow–up செய்துகொண்டிருக்கிறேன். அவர்கள் சொல்வது என்னவென்றால், தமிழ்நாடு அரசு ஒரு முடிவெடுத்தால் நிச்சயமாக நடக்கும்; ஒரு ordinance pass செய்தால், நிச்சயமாக நடக்கும். கிட்டத்தட்ட 50,000 மலையாளம் மொழி பேசும் ஈழுவா மக்கள் அங்கே வசிக்கிறார்கள். அவர்களுக்கு BC என்ற community certificate வழங்க வேண்டும். SC/ST Certificate வழங்கினால்தான் problem வரும். இந்த BC Certificate–ஐ அங்கிருக்கும் குழந்தைகளுக்காகக் கேட்கிறார்கள். தயவுகூர்ந்து, தாயுள்ளம் கொண்டு பரிசீலிக்க வேண்டும். அங்குள்ள மலையாளம் பேசும் மக்கள் மாற்று தேசத்துக்காரர்கள் கிடையாது. இது குடியுரிமைப் பிரச்சினை கிடையாது. நீங்கள் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறீர்கள். அவர்களுக்கு BC Certificate வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் குழந்தைகளின் தகப்பனார்களிடம் BC certificate இருக்கிறது. குழந்தைகளுக்குத்தான் அந்தச் சான்றிதழ் இல்லை. அவர்களுக்கு படிப்பும் கிடையாது; படித்தாலும் வேலை கிடையாது. கூடலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் இதுகுறித்து பல முறை வற்புறுத்தியிருக்கிறார்கள். கூடலூர் எல்லையை ஒட்டியே கேரளா மாநிலத்தின் வயநாடு பகுதியின் எல்லையும் இருக்கிறது. அந்தப் பகுதியும், கன்னியாகுமரி மாவட்டத்தைப் போன்று அருகிலேயே இருப்பதால், தயவுகூர்ந்து அந்த ஈழுவா மக்களுக்கு BC சாதிச் சான்றிதழ் வழங்குமாறு தாழ்மையோடு தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். இது வேண்டுகோள்தானே! (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

2020 ஜனவரி 8]

திரு. கணேஷ் அவர்கள், மருத்துவக் கல்லூரிக்கு வனத் துறைக்குச் சொந்தமான இடத்தை ஒதுக்குவது குறித்து தெரிவித்தார். இந்தப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், ஆணையின்படியும், வனத் துறை அதிகாரிகள் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார்கள். என்ன உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி, அரசுக்குச் சாதகமாக, மருத்துவக் கல்லூரிக்கு வனத் துறையின்கீழ் வருகின்ற இடங்களை ஒதுக்கித் தருவதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–ல் மாநகராட்சி சார்பில், திராவிட முன்னேற்றக் கழக நிருவாகத்தின்போது, சென்னை மாநகரில் 38 பூங்காக்களில் யோகா மேடைகள் அமைக்கப்பட்டு, பொது மக்களுக்கு இலவசமாக யோகா பயிற்றுவிக்கப்பட்டது; சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு யோகா பயிற்றுவிக்கப்பட்டது; சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு யோகா பயிற்றுவிக்கப்பட்டது; சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் யோகா பயிற்றுவிக்கப்பட்டது.

முற்பகல் 10–20

எல்லாவற்றுக்கும் மேலாக, சென்னை மாநகராட்சியில் கல்வித் துறை நிருவகித்த 27 உயர்நிலைப் பள்ளிகள், 38 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட 138 பள்ளிகளில் யோகா வகுப்புகள் தொடங்கப்பட்டு, 100 ஆசிரியர்களை கோவை மாவட்டத்திலுள்ள ஆழியாறுக்கு பயிற்சிக்கு அனுப்பி வைத்து, அவர்கள்மூலம் சென்னை மாநகராட்சியிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் யோகாவை ஒரு பாடமாக்கி, பயிற்றுவிக்கப்பட்டது. ஆனால், கடந்த காலங்களில் பூங்காக்களிலும் யோகா பயிற்சி இல்லை; ஓட்டுநர்களுக்கும் யோகா பயிற்சி இல்லை; அலுவலர்களுக்கும் யோகா பயிற்சி இல்லை. கர்ப்பிணித் தாய்மார்களுக்கென யோகா பயிற்சி அப்போது துவக்கப்பட்டது, அதுவும் இப்போது இல்லை; பள்ளி மாணவர்களுக்கும் யோகா பயிற்சி இல்லை. எனவே, சென்னை மாநகராட்சியில் உள்ள

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயில்கிற அனைத்து மாணவர்களுக்கும் யோகாவை ஒரு சிறப்புப் பாடமாகக் கொண்டு வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் மேயராக இருந்தவர். அந்தக் காலக்கட்டத்திலே நடைபெற்ற நிகழ்வினைக் குறிப்பிட்டார்கள். பள்ளி மாணவர்களுக்கும், அங்கே இருக்கிற அலுவலர் பெருமக்கள் அத்தனை பேருக்கும் யோகா பயிற்சி அளிக்கப்பட்டதாகவும், பூங்காக்களில் யோகா மேடைகள் அமைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். அந்த அடிப்படையில், ஆழியாறில் பயிற்சி பெற்று வந்திருக்கிற ஆசிரியர்கள்மூலம், யோகா பயிற்சியினை வழங்குவது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன் ஒருங்கிணைந்து பேசி, மீண்டும் அதைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும். ஏனென்றால், ஒவ்வொருவரும் மன அழுத்தம் இல்லாமல் வாழ்வதற்கும், உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கும், முகம் பொலிவாக இருப்பதற்கும் யோகா உதவிகரமாக இருக்கும். கோபத்தோடு இருக்கிறவர்கள்கூட யோகா பயிற்சி செய்வதன்மூலம், கோபம் வராமல் தடுக்க முடியும். உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு யோகா முக்கிய காரணமாக விளங்குகிறது. இந்தியாவில் முதன்முறையாக ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இது தோன்றியது. இன்றைக்கு உலக நாடுகளும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.